# தமிழ்நாடு திருநாள்...! முதல்வர் வலைதளப் பதிவு!

முதல் பக்கத் தொடர்ச்சி

"தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டுங்கள்! என்று வேண்டி, 72 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து மறைந்தார் விருதுநகர் தியாகி சங்கரலிங்கனார்! தமிழ்நாடு கேட்டுப் போராடுபவர்களை 'நான் சென்ஸ்' என்று சொன்னதை எதிர்த்து மும்முனைப் போராட்டம் நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம். நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கானவர்கள், பல மாதங்கள் சிறை வைக்கப்பட்டார்கள். தூத்துக்குடியில் நான்கு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்கள். இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சியில் அமர்ந்த காரணத்தால்தான், தாய்த் தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

**'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டிய அண்ணா!**

காஞ்சி தந்த காவியத் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்ததால்தான் தாய்த் தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.க ஆட்சி அமைந்தபிறகு, 1968 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டப்பட்டது. தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நன்னாளில், 'தமிழ்நாடு வாழ்க' என வாழ்த்தி முழக்கமிட்டார் பேரறிஞர் அண்ணா! சட்டமன்றத்தில் இருந்த அனைவரும் பதிலுக்கு 'தமிழ்நாடு வாழ்க' என மூன்று முறை உணர்ச்சி மேலிடக் குரல் எழுப்பினார்கள்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!**

"தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் தேதி, தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும்" என்று கடந்த 2021ஆம் ஆண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற நமதியக்கம் மட்டும் உருவாகாமல் போயிருந்தால், தமிழ்நாட்டில் இந்த இயக்கம் ஆட்சிக்கு வராமல் போயிருந்தால், இந்த மாநிலத்திற்கு இன்று வரையில் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்படாமலேயே இருந்திருக்கும் என்றால் அது மிகையில்லை!

**'வாழ்விலோர் திருநாள்!'**

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் போல இதுவும், 'சென்னைப் பிரதேசம்' என்று அடையாளமற்ற மாநிலமாகத்தான், இன்று வரை இருந்திருக்கும்... வரலாற்றுப் பெருமை கொண்ட நமது தமிழினம் வாழ்ந்த நிலப்பரப்புக்கு, 'தமிழ்நாடு' என்ற பெயர் இல்லாவிட்டால், அது அவமானம் அல்லவா? அந்த அவமானம் துடைக்கப்பட்ட நாள்தான், இந்த ஜூலை 18ஆம் நாள்!

முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் வந்ததால்தான் "தமிழ்நாடு நாள்" என்ற உணர்ச்சி மிகு நாள் கிடைத்தது. இது வெறும் நாளல்ல, வாழ்விலோர் திருநாளாக உணர்ச்சி மிகு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி பதிவு!**

இந்நாளில் முதல்வர் அவர்கள் வெளியிட்ட காணொலியில், முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

**"கடல் கண்டு, மலை கண்டு**
**பெயர் கொண்ட**
**தமிழ்நாடு வாழ்க!**

**களங் கண்டு கலை கண்டு**
**கவி கொண்ட**
**தமிழ்நாடு வாழ்க!**

**உடல் கொண்டு உரங்கொண்டு**
**உயிர் கண்ட**
**தமிழ்நாடு வாழ்க!**

**ஜூலை 18 - 'தமிழ்நாடு நாள்' - 'தமிழ்நாடு திருநாள்' என்று சொல்லும் போதே நமது உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு ஆற்றல் பிறக்கிறது.**

**தமிழ்நாடு வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## தூத்துக்குடியில் 36 ஆயிரத்து 238 கோடி ரூபாய் முதலீட்டில்

# பசுமை ஹைட்ரஜன் அலகு அமைக்கும் பணி!

## தமிழ்நாடு அரசின் ஒப்பந்தப்படி 'செம்கார்ப்' நிறுவனம் தொடங்கியுள்ளது!

**தூத்துக்குடி, ஜூலை 20-**

**தூத்துக்குடியில் 36 ஆயிரத்து 238 கோடி ரூபாய் முதலீட்டில் பசுமை ஹைட்ரஜன் அலகு அமைக்கும் பணியை செம்கார்ப் நிறுவனம் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பசுமை ஹைட்ரஜனை ஜப்பானுக்கு அளிக்கும் வகையில் அங்குள்ள நிறுவனத்துடன் செம்கார்ப் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.**

பருவநிலை மாற்றம் காரணமாக பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு குறித்து உலக நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன. சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய எரிசக்தியாக கருதப்படும் பசுமை ஹைட்ரஜனின் தேவை, எதிர்காலத்தில் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. இந்தியாவை பொறுத்தவரையில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, ஒடிசா மாநிலங்கள் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது.

தேசிய அளவில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது. பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்காக ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாடு அரசு முதலீடுகளை ஈர்த்துள்ளது.

2026-27 ஆம் நிதியாண்டில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்வதை இலக்காக கொண்டு, அதற்கேற்ற கட்டமைப்பு வசதிகளை திராவிட மாடல் அரசு உருவாக்கி வருகிறது.

இந்நிலையில் தூத்துக்குடியில் 36 ஆயிரத்து 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை ஹைட்ரஜன் ஆலையை அமைக்க சிங்கப்பூரை சேர்ந்த செம்கார்ப் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு தொடக்கத்தில் ஒப்பந்தம் செய்தது. இதையடுத்து பசுமை ஹைட்ரஜன் அலகு அமைப்பதற்கான பணிகளை சிங்கப்பூரைச் சேர்ந்த செம்ப்கார்ப் நிறுவனம் தொடங்கியுள்ளது.

தொடர்ந்து இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பசுமை ஹைட்ரஜனை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தத்தில் சிங்கப்பூர் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது. ஜப்பானிய நிறுவனங்களான Sojitz Corp மற்றும் Kyushu Electric Power உடன் இணைந்து பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி பணியை மேற்கொள்ள உள்ளதாக செம்ப்கார்ப் நிறுவனம் அறிவித்துள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராமத்தில் நடைபெற்ற "க்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து, உரையாற்றினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திருமதி.கலைவாணி சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை

# உலகறியப் பறைசாற்றியவர்களுக்கு - 15 முருகனடியார்களின் பெயர்களில் விருதுகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்.



சென்னை, ஜூலை 20-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2024) ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு முன்னேற்பாடு பணிகள், விழா மலர் மற்றும் ஆய்வு மலர்கள் வடிவமைப்பு, மாநாட்டில் பங்கேற்கும் முக்கிய பிரமுகர்களுக்கு சிறப்பு செய்தல், தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்தல் ஆகிய பொருண்மைகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 13.07.2024 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளான மாநாட்டு அரங்கங்கள் மற்றும் இலட்சினைகள் வடிவமைப்பு, புகைப்படக் கண்காட்சி, காட்சியரங்கம், நிகழ்ச்சி நிரல், விழா அழைப்பிதழ், கலை நிகழ்ச்சிகள் குறித்தும், ஆய்வுக் கட்டுரைகளை தேர்வு செய்து தகுதிப்படுத்தும் பணிகள், மாநாட்டு மலரில் இடம்பெறும் அம்சங்கள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நிறைவாக, அமைச்சர் பேசுகையில், அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் நிறைவு நாளில் தமிழ்க் கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் முருகனடியார்களான நக்கீரர், போகர், அருணகிரிநாதர், குமரகுருபரர், பாம்பன் சுவாமிகள், வாரியார் போன்ற 15 முருகனடி யார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட வேண்டுமெனவும், அதற்காக தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங் களை பெற்று விரைந்து பரிசீலித்து முடிவெடுக்க வேண்டுமெனவும், மாநாட்டில் பங்கேற்கும் முக்கிய பிரமுகர்களை சிறப்பிக்கும் பணிகள் மற்றும் மாநாடு நடைபெறும் இரண்டு நாட்களும் 50,000 நபர்களுக்கு உணவு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அறிவுரைகளை வழங்கினார். இப்பணிகளை மாநாட்டு ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவத்திரு திருவண்ணா மலை ஆதீனம் பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தவத்திரு திருக்கயிலாய பரம்பரை, பேரூர் ஆதினம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், சுகிசிவம், திருமதி தேசமங்கையர்க்கரசி, கூடுதல் ஆணையர்கள் ஆர். சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் புதிய மாநகராட்சிகள் உருவாக்குதல் உள்ளிட்ட

# 4 சட்டத்திருத்த மசோதாக்களுக்கு ஒப்புதல்!

## ஆளுநர் ஆர்.என். ரவி வழங்கினார்!

சென்னை,ஜூலை.20-

புதிய மாநகராட்சிகள் உருவாக்க வருவாய் மற்றும் மக்கள் தொகை வரம்புகளை குறைத்தல், சென்னையில் கழிவுநீர் இணைப்பை கட்டாயமாக்குதல், சென்னை காவல் சட்டத்தை மற்ற நகரங்களுக்கும் விரிவாக்கம் செய்தல் உள்ளிட்ட 4 சட்டத்திருத்த மசோதாக்களுக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாமக்கல் மற்றும் காரைக்குடி மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கு, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த மக்கள் தொகை, வருமான அளவுகளை குறைத்து மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான நகர்ப்புற உள்ளாட்சி திருத்த சட்டமசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி சட்டப்பிரிவில் மக்கள் தொகையாக இருந்த 3 லட்சம் என்பது 2 லட்சமாகவும், சம்பந்தப்பட்ட பகுதியின் ஆண்டு வருமானம் ரூ.30 கோடியில் இருந்து ரூ.20 கோடியாகவும் குறைக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது.

மேலும், ஊரக உள்ளாட்சிகளை, நகர்ப்புற உள்ளாட்சிகளுடன் இணைக்கும் போது அப்பகுதியில் வரும் சொத்துக்கள் உள்ளிட்டவற்றை மாற்றம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதே போல், சென்னையில், தனியார் வளாகம் அல்லது ஒரு தனியார் தெருவின் மிக அருகில் உள்ள இடத்தில் இருந்து 30 மீட்டர் தூரத்துக்குள், வாரியத்தின் கழிவுநீர்ப்பாதை இருக்குமானால், அந்த வளாகத்தின் உரிமையயாளர் அல்லது குடியிருப்பவர், தனியார் தெருவின் உரிமையாளர், கழிவுநீரை வாரியத்தின் கழிவுநீர்ப்பாதையில் வெளியேற்றுவதற்காக இணைப்பு பெறுவதை கட்டாயமாக்கும் வகையில் சென்னை குடிநீர் வாரிய விதிகளில் திருத்தம் செய்வதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், சென்னை மாநகர காவல் சட்டத்தை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய நகரங்களுக்கும் விரிவாக்கம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதாவும் நிறைவேற்றப்பட்டன.

இந்த மசோதாக்கள் ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன.

இந்நிலையில், இந்த மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து, இந்த சட்டத்திருத்தங்கள் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



தொ.மு.ச. பேரவையில் நிர்வாகியாக இருந்து தொழிற் சங்கத்தில் பணியாற்றி மறைந்த மு.ரத்தினவேலு குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மண்டல தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக போக்குவரத்து கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களிடம் வசூலிக்கப்பட்ட நிதி ரூ.6,39,000/த்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கினார். உடன் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி,கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் கல்பனா செந்தில், கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் விஷ்ணு பிரபு, கழக மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் மாலதி எம்.சி., பகுதிச் செயலாளர்கள் கணபதி லோகு,எ.எம். கிருஷ்ணராஜ், மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச் செல்வன்,மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் தெய்வயானை, எல்.பி.எப். பொதுச்செயலாளர் பெரியசாமி, மண்டலத் தலைவர் துரைசாமி, மண்டல பொருளாளர் கணேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், இத்தலார் ஊராட்சியில் தென்மேற்கு பருவ மழையினால் மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.